# தலைமைச் செயலாளரா? த.வெ.க. செயலாளரா?

## கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டி! முதல் பக்கத் தொடர்ச்சி...

## மேகதாது பிரச்சினையை திசை திருப்பவே எம்.பி.க்கள் கூட்டம்!

மறுவரையறை மசோதா மட்டும்தான். தொடர்ந்து அதற்காகக் குரல் கொடுத்துக் கொண்டிருக்கக்கூடிய இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்.

ஆனால், அதே நேரத்தில் தமிழ்நாடு பாதிக்கப்படக்கூடாது என்பதுதான் எங்களுடைய தொடர் கோரிக்கையாக இருக்கிறது. நாங்கள் வைத்திருக்கக்கூடிய தீர்மானங்களின் அடிப்படையில், நாங்கள் போன முறை அந்த மசோதா கொண்டுவரப்பட்டபோது நாடாளுமன்றத்தில் எங்களுக்கு எதெல்லாம் ஏற்றுக் கொள்ள முடியாது என்பதை மிகத் தெளிவாக எடுத்துவைத்திருக்கிறோம்.

அந்த சட்ட மசோதாவில் எந்த இடத்திலேயுமே, கொண்டுவரக்கூடிய தொகுதி மறுவரையறை எல்லாருக்கும் ஒரே சமமாக அதிகரிக்கப்படும் என்றும், தமிழ்நாட்டுடைய சதவீதம் எந்தக் காலகட்டத்திலும் மாறாது என்றும் கூறப்பட்டிருந்தது. ஆனால், அந்தப் பில்லுக்குள் அதற்கான உறுதியான ஏற்பாடு எதுவும் இல்லை. வாய்மொழியாக உள்துறை அமைச்சர் நாடாளுமன்றத்தில் வந்து அதைச் சொன்னாரே தவிர, அது தொகுதி மறுவரையறை மசோதாவில் இல்லை. அதனால் நாங்கள் இதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று நிராகரித்தோம்.

இப்போது அடுத்த முறை மசோதா வரப்போகிறது என்று பரவலாகப் பேசப்படுகிறது. ஆனால், இதுவரைக்கும் ஒன்றிய அரசாங்கம் எங்களை அழைத்தோ, எதிர்க்கட்சிகளை அழைத்தோ பேசியதாக எங்களுக்கு தகவல் இல்லை. ஒருவேளை ஒரு சில பேரிடம் பேசியிருக்கலாம். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தை இதுவரை அழைத்து, மசோதா மாற்றி அமைத்து கொண்டு வருகிறோம் என்று எந்தத் தகவலும் வரவில்லை.

இந்த கூட்டத்தொடரில் கொண்டு வருவதற்கான வாய்ப்பு இல்லை என்பதுதான் எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கக்கூடிய செய்தி. அதனால் இந்த மசோதாவும் இல்லை; மசோதாவினுடைய வரைவும் தரப்படவில்லை. ஆகையால், என்னென்ன மாற்றங்கள் இருக்கின்றன, என்ன மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்பது பற்றியும் எந்தவிதமான தகவலும் இல்லை. அப்படி இருக்கும் பொழுது, பழைய மசோதாவிற்கு இங்கே இப்போது புதிதாக வரும் என்று நாம் நினைக்கக்கூடிய மசோதாவிற்கும் என்ன பெரிய மாற்றம் இருக்க முடியும்?

இந்நிலையில் இந்தக் கூட்டம் எதற்காக கூட்டப்பட்டது. யார் அந்தக் கூட்டத்திற்குப் பின்னணியில் இருக்கிறார்கள், யார் இவர்களை, இந்த அரசாங்கத்தை இயக்கிக் கொண்டிருக்கிறார்கள்? அதைத் தாண்டி, ஒரு கூட்டம் நடத்துகிறோம் என்றால், ஒரு அரசாங்கம் கட்சித் தலைமைக்குத்தான் கடிதம் எழுத வேண்டும். ஆனால், தலைமை செயலர் தனிப்பட்ட முறையில் எம்.பி.க்களுக்கு கடிதத்தை அனுப்புகிறார். அப்படியென்றால், தலைமை செயலர் யாருக்குப் பணியாற்றுகிறார்? தமிழ்நாடு அரசாங்கத்திற்கா, இல்லையென்றால் ஓர் அரசியல் இயக்கத்திற்கா என்ற கேள்வி எழுகிறது.

**கட்சித் தலைமைக்குத்தான் கடிதம் எழுத வேண்டும்!**

தமிழக வெற்றிக் கழகத்தினுடைய தலைமை செயலர் போல வந்து ஒவ்வொரு எம்.பி.க்கும் கடிதம் எழுதி எங்களை அழைப்பது என்பதே முறையில்லாத ஒன்று. எங்களுடைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அனைத்துக் கட்சிக் கூட்டத்தை அழைத்தபோது, கட்சியுடைய தலைவர்களுக்குத்தான் கடிதம் எழுதினார்கள். யாரை அனுப்புவது என்று கட்சித் தலைமை மட்டுமே முடிவு செய்ய வேண்டும். அதனால் எம்.பி.க்களுக்கு தனியாக வந்து நீங்கள் கடிதம் எழுதுவது என்பதே முறையில்லாத ஒன்று.

**மேகதாது பிரச்சினையை திசை திருப்பவே கூட்டம்!**

மேகதாது, விவாசாயிகள் பிரச்சனை என எத்தனையோ பிரச்சனைகள் இருக்கின்ற சூழலில் திசை திருப்பக்கூடிய ஒரே எண்ணத்தோடு இந்த கூட்டம் கூட்டப்பட்டுள்ளது. அவர்களுடைய கூட்டணியில் இருக்கக்கூடியவர்களுக்கு எந்தவிதமான ஒரு தர்மசங்கடமும் வந்துவிடக்கூடாது என்ற எண்ணத்தோடு, திசை திருப்புவதற்காக இன்றைக்கு இந்தக் கூட்டம் நடத்தப்பட்டிருக்கிறது; அதற்காகவே இந்தப் பிரச்சனையை கையில் எடுத்திருக்கிறார்கள்.

தற்போது கட்சியில் ஒவ்வொரு கட்சிக்கும் எத்தனை நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்ற அடிப்படையில்தான் நேரம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. சுயேட்சையாக இருக்கக் கூடியவர்களுக்குத்தான் நேரம் குறையக்கூடிய வாய்ப்பு இருக்கிறதே தவிர, உங்களுடைய கட்சிக்கு எத்தனை பிரதிநிதிகள் இருக்கிறார்கள் என்பதன் அடிப்படையில்தான் நேரம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அதனால் இதையெல்லாம் ஒரு காரணமாகச் சொல்லி, இது வேண்டாம் என்று சொல்வது கிடையாது.

**மக்கள் தொகை அடிப்படையில் கூடாது!**

எங்கள் இயக்கத்தை பொறுத்தவரை நாங்கள் கேட்கக்கூடிய ஒன்றே ஒன்று, 33 சதவீதம் பெண்களுக்கு இடஒதுக்கீடு வேண்டும் என்பதுதான். அதுதான் எங்களுடைய தொடர் கோரிக்கையாக இருக்கிறது. ஆனால் சில இடங்களில், கிட்டத்தட்ட சில தொகுதிகளில் 40 லட்சத்திற்கும் மேலாக அங்கு இருக்கக்கூடிய மக்கள் தொகை இருக்கக்கூடிய ஒரு சூழலில், தொகுதி மறுவரையறையை மக்கள் தொகை அடிப்படையில் கொண்டு வந்தால் தென் மாநிலங்களுக்கு மிகப்பெரிய ஒரு பாதிப்பு இருக்கும். அதனால் மக்கள் தொகை அடிப்படையிலேயே அதை கணக்கீடு செய்யக்கூடாது என்பதுதான் நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தக்கூடிய ஒன்று.

அதனால் தமிழ்நாட்டுக்கு எந்த விதத்திலும் இந்தப் பிரதிநிதிகளுடைய எண்ணிக்கை குறைந்து விடக்கூடாது. நாங்கள் மக்கள் தொகையைக் குறைத்திருக்கிறதற்காகப் பழி வாங்கப்படக்கூடாது என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லக்கூடிய விஷயம்.

**தி.மு. கழகத்தை இதுவரை யாரும் அழைத்துப் பேசவில்லை!**

ஒரு மசோதா வரும்போது ஆளுங்கட்சி எல்லோரையும் அணுகுவது இயல்பு. அந்தவகையில்தான், பாஜக எல்லாரையும் அணுகியிருக்கிறார்கள். எனக்கு வந்த செய்திபடி நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜூ, எதிர்க்கட்சித் தலைவராக இருக்கக்கூடிய ராகுல் காந்தியை நேரடியாகச் சென்று சந்தித்தார் என்றும் சொல்கிறார்கள். தவெக வேண்டுமென்றால் யாரையும் சுமூகமாக அணுகிப் பேசாமல் இருக்கலாம். ஆனால் பொதுவாக நாடாளுமன்றத்தில் ஒரு பில் கொண்டு வர வேண்டுமென்றால் எல்லாத் தலைவர்களையும் அழைத்துப் பேசுவார்கள். ஆனால், போன தடவை தோற்கடிக்கப்பட்ட மசோதா இப்போது மறுபடியும் கொண்டு வரப் போகிறோம்; அதனால் அதைப் பற்றி நாங்கள் பேச வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தை இதுவரை யாரும் அழைத்துப் பேசவில்லை.

நிச்சயமாக நம்முடைய மாநிலம் எந்த விதத்திலும் பாதிக்கப்படாமல், இப்பொழுது இருக்கக்கூடிய சதவீதம் குறைக்கப்படாமல், நம்முடைய எம்.பி.க்களுடைய எண்ணிக்கை அதிகரிக்கப்படும் என்ற நோக்கில்தான், தொடர்ந்து எங்களுடைய தலைவரும், திராவிட முன்னேற்றக் கழகமும் இதற்காகப் போராடிக் கொண்டிருக்கிறோம்.

**முதுகில் குத்தியவர்கள் யார் என்பது மக்களுக்குத் தெரியும்!**

தொடர்ந்து, யார் எட்டப்பர்கள், யார் எட்டப்பர்கள் இல்லை என்பது தேர்தல் முடிவுக்குப் பிறகு யார் யார் எப்படி நடந்துகொண்டார்கள் என்பதைப் பார்த்து மக்களுக்கு மிகத் தெளிவாகத் தெரியும். அதனால் யார் எட்டப்பர்கள் என்று தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரியும். யார் முதுகில் குத்தியவர்கள், யார் நேர்மையாக மக்களோடு அரசியல் செய்கிறார்கள் என்று தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரியும்.

மேலும், திராவிட முன்னேற்றக் கழகமும் அ.தி.மு.க.வும் மேகதாது விஷயத்திலும் ஒருமித்த கருத்தைத்தான் கொண்டிருக்கிறோம். பல நேரங்களில் ஒரே விஷயத்திற்காக ஒன்றாக்கூட போய் நாங்கள் டெல்லியில் பிரதிநிதித்துவப்படுத்தியிருக்கிறோம். அதனால் இது புதிதான ஒரு விஷயம் அல்ல. இவர்கள் புதிதாக ஆட்சிப் பொறுப்பிற்கு வந்திருக்கிறார்கள்; இவர்கள் புதிதாக அரசியலுக்கு வந்திருக்கிறார்கள் என்பதால் காலம் காலமாக நடந்து கொண்டிருக்கக்கூடிய பல விஷயங்கள் இவர்களுக்குத் தெரியவில்லை என்பதற்காக, இது இதுவரை நடக்காத ஒன்று இல்லை.

**மேகதாது பிரச்சினையில் தி.மு.க. இணைந்து செயல்படும்!**

அதனால் இப்பொழுது கூட இன்று ஆட்சிப் பொறுப்பில் இருக்கக்கூடிய தவெக, எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களையோ அல்லது அவர்களுடைய கட்சிகளுடைய பிரதிநிதிகளையோ அழைத்துக்கொண்டு போய், அங்கே இருக்கக்கூடிய நீர்வளத்துறை அமைச்சரையோ அல்லது மற்ற அமைச்சர்களையோ சந்தித்து, இந்த மேகதாது பிரச்சனையைப் பற்றி அவர்களிடம் எடுத்துச் சொல்வது என்றால், நிச்சயமாக திராவிட முன்னேற்றக் கழகமும் அவர்களோடு செல்ல தயாராக இருக்கிறோம்.

ஆனால் திசை திருப்புவதைத் தவிர வேறு எதுவும் தவெகவிற்கு தெரியவில்லை. இன்றைய கூட்டம் நடந்து முடிந்துவிட்டது இல்லையா? ஏதாவது தீர்மானம் வெளியிட்டிருக்கிறார்களா? இல்லையென்றால் முதல்வர் இந்தக் கூட்டத்தில் நாங்கள் இந்த முடிவெல்லாம் எடுத்திருக்கிறோம் என்று சொன்னாரா? இதில் தவெக உடைய நிலைப்பாடு என்ன? ஏதாவது தெளிவுபடுத்தியிருக்கிறார்களா? அதனால் அவர்களின் நோக்கம் என்ன என்று எங்களுக்குத் தெரியவில்லை; அவர்களுக்காவது தெரியுமா என்று எனக்குத் தெரியவில்லை.

முன்னதாக விவசாயிகள் மீது அவர்களுக்கு இருக்கக்கூடிய அக்கறை என்ன என்பது நமக்கு நன்றாகத் தெரியும். இதையெல்லாம் தாண்டி திசை திருப்பக்கூடிய எத்தனையோ விஷயங்கள் இன்றைக்கு நடந்து கொண்டிருக்கின்றன. இதிலிருந்து திசை திருப்பி, இன்றைக்கு திடீரென்று தனக்கு இந்தத் தொகுதி மறுவரையறை மீது அக்கறை இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிற விதமாகத்தான் இந்தக் கூட்டம் நடத்தப்பட்டிருக்கிறது.

திமுக ஆட்சிக்காலத்தில் நடந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தவெகவில் இருந்து வந்து கலந்து கொண்ட ஆனந்த் அந்தத் தீர்மானங்களை ஏற்றுக்கொண்டு கையெழுத்திட்டிருக்கிறார். இப்பொழுது புதிதாக ஒரு தீர்மானம் போடப்படுகிறது. அந்தத் தீர்மானம் இருக்கும்பொழுது புதிதாக ஒரு தீர்மானம் கொண்டு வந்தால், அந்தத் தீர்மானத்தை நீங்கள் நிராகரிக்கிறீர்களா? அந்தத் தீர்மானத்தை எதிர்க்கிறீர்களா? எதற்காக ஒரு புதிய தீர்மானம்? ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்ட நிலையில், அதைத் தாண்டி இன்னொரு தீர்மானம் கொண்டு வர வேண்டுமென்றால், அதற்கும் இதற்கும் என்ன வித்தியாசம் என்ன நீங்கள் தான் சொல்ல வேண்டும்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டியளித்தார்.

---

### மழைக்காலம் தொடங்குவதை முன்னிட்டு

# ஓடைகள், நீர்வழிப்பாதைகளை உடனடியாக சீரமைத்திடுக!

## தூய்மை காவலர்களுக்கு முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு அறிவுறுத்தல்!

*திருவண்ணாமலை, ஆக. 10-*

*மழைக்காலம் தொடங்குவதை முன்னிட்டு ஓடைகள், நீர்வழிப்பாதைகளை உடனடியாகசீரமைத்திடுக என்று தூய்மை அருணை அமைப்பின், தூய்மைக் காவலர்களுக்கு, முன்னாள் அமைச்சரும், தூய்மை அருணையின் அமைப்பாளருமான எ.வ.வேலு அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.*



*திருவண்ணாமலையில் தொண்டு செய்வோம், துணை நிற்போம் என்ற முழக்கத்தோடு கடந்த 8 ஆண்டுகளாக முன்னாள் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களை அமைப்பாளராகக் கொண்டு, தூய்மை அருணை திட்டம் செயல்பட்டு வருகிறது. தூய்மை அருணை திட்டத்திற்கு 4 மேற்பார்வையாளர்களும், 39 வார்டுக்கு 39 ஒருங்கிணைப்பாளர்களும், மாட வீதி தூய்மைப் பணிக்கு 7 ஒருங்கிணைப்பாளர்களும் ஒவ்வொரு வார்டுக்கும் 25 தூய்மைக் காவலர்கள் என ஆயிரக் கணக்காணோர் மரம் நடுதல், பராமரித்தல், கால்வாய் மற்றும் தூர்வாருதல் என செயல்பட்டு வருகின்றனர்.*

*இதனைத் தொடர்ந்து, தூய்மை அருணை அமைப்பும், அருணை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும் இணைந்து, கர்ப்பிணி தாய்மார்களுக்கு வளை காப்பு நிகழ்ச்சி மாதந்தோறும் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டு, முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் ஜுலை 16 அன்று தொடங்கி வைத்தார்கள். இது மாதந்தோறும் நடைபெற்று வருகிறது.*

*08.08.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 7.00மணிக்கு, திருவண்ணாமலை மாநகரம், அவலூர் பேட்டை சாலை இரயில்வே கேட் அருகில், வார்டு எண்3, இராம மூர்த்தி நகரில் மண்மேடுகள் அகற்றுதல், புதர்மண்டியிருந்த செடி, கொடிகளை அகற்றுதல் ஆகிய தூய்மை பணிகளை முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு பார்வையிட்டு ஆலோசனைகளை வழங்கினார்.*

*அடுத்து காலை 7.15மணிக்கு, வார்டு எண். 2, மவுண்ட் செயிண்ட் மேல்நிலைப்பள்ளி பின்புறம் உள்ள கால்வாய் அடைப்புகள் நீக்கும் பணியினையும்,*

*காலை 7.30மணிக்கு, வார்டு எண் 1ல், கால்வாய் அடைப்புகள் நீக்கும் பணி, குப்பைகள் அகற்றும் பணியை பார்வையிட்டும், பின்னர் செட்டிக்குளத்தில் நீர்வரத்துப் பாதைகள் அடைப்பட்டுக்கிடப்பதால் அவற்றை உடனடியாக தூர்வாரிட அறிவுறுத்தினார்.*

*காலை 7.45மணிக்கு, வார்டு எண்6 புதுத் தெருவிலும், வார்டு எண்7 பேகோபுர முதல் தெருவிலும், மலை ஓடை முழுவதும் மண்மேடாகவும், செடி, கொடிகள் படர்ந்தும் உள்ளதை கண்டு, அதை உடனடியாக மழைக்காலம் தொடங்கும் முன் தூர்வாரிட வேண்டுமென அறிவுறுத்தினார்.*

*காலை 8.00மணிக்கு, வார்டு எண் 4, முத்துவிநாயகர் கோயில் தெருவில் நடைபெறும் தூய்மை பணியினைப் பார்வையிட்டு, தூய்மைக் காவலர்களுக்கும், தூய்மைப் பணியாளர்களுக்கும் தேனீர் வழங்கி பாராட்டினார்.*

*காலை 8.15மணிக்கு வார்டு எண்9ல், காந்தி நகரில் நடைபெறும் கால்வாய் அடைப்பு மற்றும் தூய்மைப்பணியையும்,*

*காலை 8.30மணிக்கு, வார்டு எண்10, செல்லனேரித் தெருவில் நடைபெற்று வரும் மண்மேடு அகற்றுதல், முட்செடிகளை அகற்றுதல்,*

*காலை 8.45மணிக்கு, வார்டு எண்21, அஜிஸ் காலனியில் நடைபெற்று வரும் கால்வாய் அடைப்புப் பணிகளை பார்வையிட்டு, முன்னாள் அமைச்சர்எ.வ.வேலு ஆலோசனைகளை வழங்கினார்.*

*தூய்மைப் பணியில் தூய்மை அருணையின் மேற்பார்வையாளர்கள் இரா.ஸ்ரீதரன், ப.கார்த்திவேல்மாறன், ப்ரியா ப.விஜயரங்கன், இல.குண சேகரன், துணை மேயர் சு. ராஜாங்கம், ஒருங்கிணைப்பாளர்கள் அ. கோவிந்தன், செ. எழில்மாறன், எஸ்.கண்ணதாசன், ஏ.ஏ.ஆறுமுகம், ம.வினோத்குமார், எஸ். கே.டி.வீரா, வழக்கறிஞர்கள் ம.செந்தில், சு.விஜி(எ) விஜியராஜ், கிருஷ்ண மூர்த்தி, ஆகாஷ்.ஹரிகிருஷ்ணன், வழக்கறிஞர் ந.சீனுவாசன், இரா.அருண்குமார், மெட்ராஸ் கே.சுப்பிரமணி, காலேஜ் கு.ரவி, கே.காளிதாஸ், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பி.ஆர்.நாகராஜ், கு.குமார், மண்டி.பிரகாஷ், மு. கருணா மூர்த்தி, இரா. ராஜாமணி, அ.திவாகர், அ.பழனி, கே.பிரகாஷ், பி.ஜி.முருகன், கோபி.சங்கர், சென்னை.சுரேஷ், முபாரக், லயன்.ஷெரீப். கா.ஏழுமலை, எஸ்.ஜாகீர், இரா.ஜோதி, கு.தியாகு, மூ.காமேஷ், ஹக்கிம்சேட், சி.கே.சசிக்குமார், கோல்டு. எஸ்.பிரபு மற்றும் மாட வீதி ஒருங்கிணைப்பாளர்கள் அருணை.வெங்கட், சினம்.பெருமாள், ஆர். கே.பாஸ்கர், ஜீவரேகா விஜயராஜ், உட்பட ஆயிரக்கணக்கான தூய்மைக் காவலர்களும் கலந்து கொண்டனர்.*

---

# மதுரை ஆவினில் ரூ.35 லட்சம் ஊழல்!

## விற்பனையான தொகை வரவு வைக்காமல் முறைகேடு!

*மதுரை, ஆக. 10-*

*மதுரை ஆவினில் 35 லட்சம் ரூபாய் முறைகேடு நடந்ததாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. 3 மண்டல ஆவின் அலுவலகங்களில் விற்பனையான தொகையை வரவு வைக்காமல் முறைகேடு செய்ததாக புகார் எழுந்துள்ளது.*

*மதுரை ஆவினில் விற்பனை பொருட்களுக்கான தொகை சிவகங்கை சாலையில் உள்ள பிரதான கிளையில் வரவு வைக்கப் படும். சிவகங்கை சாலையில் உள்ள ஆவினின் கிளையில் தொகையை வரவு வைக்காமல் முறைகேடு நடந்துள்ளது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.*

*அதன்படி, ஆரப்பாளையத்தில் 21 லட்சம் ரூபாய், பி.பி.குளத்தில் 7 லட்சம் ரூபாய், பழங்காநத்தத்தில் 7 லட்சம் ரூபாய், முறைகேடு நடந்துள்ளது. 3 விற்பனை நிலையங்களில் வசூலான தொகையை பிரதான ஆவின் கிளையில் செலுத்தாமல் முறைகேடு நடந்துள்ளது.*

*35 லட்சம் ரூபாய் முறைகேடு தொடர்பாக பி.பி.குளம், ஆரப்பாளையம் ஆவின் கண்காணிப்பாளர்களிடம் விசாரணை நடைபெற்று வருகிறது. ஆவின் மேலாளர் முத்து மாதவன், குழு அமைத்து சம்பந்தப்பட்ட ஊழியர்களிடம் விசாரணை நடத்தி வருகிறார்.*

---

# கர்நாடகா அமைச்சரவை விரிவாக்கத்தில் கரைபுரண்டோடிய லஞ்சம்!

## புயலை கிளப்பும் லஞ்ச ஆடியோ விவகாரம்!

*பெங்களூரு, ஆக. 10-*

*கர்நாடகாவில் காங்கிரஸ் அமைச்சரவை விரிவாக்கத்தின்போது, அமைச்சர் பதவிகளை வழங்க லஞ்சம் பெறப்பட்டதாகக்கூறிஆடியோ வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.*

*கர்நாடகாவில் கடந்த வாரம் நடைபெற்ற காங்கிரஸ் அமைச்சரவை விரிவாக்கத்தின் போது, லஞ்சம் கைமாறியதாகக் கூறி ஆடியோ பதிவு ஒன்று வெளியாகியுள்ளது.*

*காங்கிரஸ் நிர்வாகிகள் இருவருக்கு இடையே நடந்ததாகக் கூறப்படும் அந்த ஆடியோ உரையாடலில், மாநிலத்தில் தற்போது பதவியில் இருக்கும் 80 சதவீத அமைச்சர்கள் பணத்தைக் கொடுத்துதான் தங்களது பதவிகளைப் பெற்றுள்ளனர் என்ற அதிர்ச்சித் தகவல் இடம் பெற்றிருந்தது.*

*இந்தச் சம்பவம் கர்நாடக அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய நிலையில், காங்கிரஸ் கட்சி மேலிடத்திற்குப் பணம் தராமல் நேர்மையாகச் செயல்பட்ட எச்.கே. பாட்டீல் போன்ற மூத்த தலைவர்களுக்கு அமைச்சர் பதவி மறுக்கப்பட்டுள்ளதா என்ற கேள்வியும் எழுப்பப்பட்டது.*

*காங்கிரஸ் கட்சியில் ஒருவரின் பதவியும் தகுதியும், அவர்கள் கட்சி மேலிடத்திற்குத் தரும் லஞ்சப் பணத்தின் அளவை வைத்தே தீர்மானிக்கப்படு வதாக, அம்மாநில எதிர்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.*

*வால்மீகி பழங்குடியினர் மேம்பாட்டுக் கழக ஊழல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு, அமலாக்கத்துறையின் விசாரணையை எதிர்கொண்டு வரும் நாகேந்திரா என்பவருக்கு மீண்டும் அமைச்சரவையில் இடம் அளிக்கப்பட்டிருப்பது ஏன்? என்று எதிர்கட்சிகள் கேள்வி எழுப்பியுள்ளன.*

---

### ‘சோபா மாடல்’ ஆட்சியில் – பட்டப்பகலில்

# மதுரையில் வாலிபர் ஓட ஓட விரட்டி கொலை!

## மூன்று நாட்களில் 3 பேர் கொலை! மக்கள் பீதி!

மதுரை, ஆக. 10–

மதுரையில் நீதிமன்றத்தில் ஆஜராகி திரும்பிய வாலிபர் ஓட ஓட விரட்டி வெட்டிக் கொல்லப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. கடந்த 3 நாட்களில் ரவுடி உள்பட 3 பேர் ஹாட்ரிக் கொலை செய்யப்பட்டது. பொதுமக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

மதுரை, சிந்தாமணி கண்ணன் காலனியைச் சேர்ந்தவர் முருகன் (31). கடந்த 2018ம் ஆண்டு நடந்த ஒரு கொலை வழக்கில் குற்றவாளியாக உள்ளார். இந்த வழக்கின் விசாரணை மதுரை மாவட்ட நீதிமன்றத்தில் நடந்து வருகிறது. வழக்கின் விசாரணைக்காக நேற்று காலை நீதிமன்றத்தில் ஆஜரானார்.

நீதிமன்ற விசாரணை முடிந்து டூவீலரில் வீட்டிற்கு சென்றார். அப்போது ஒரு கும்பல் டூவீலரில் அவரை பின்தொடர்ந்தது.

அந்தக் கும்பல், அவரை ஓட, ஓட விரட்டி வீட்டின் அருகில் வைத்து சரமாரியாக வெட்டியது. இதில், பலத்த காயமடைந்த முருகன் சம்பவ இடத்திலேயே துடிதுடித்து இறந்தார்.

முருகன் இறந்ததை உறுதி செய்த அந்த கும்பல் அங்கிருந்து தப்பி ஓடியது.

**மூன்று நாளில் 3 கொலைகள்**

சோலையழகு புரம் பகுதியை சேர்ந்தவர் மணி (எ) கிரைம் மணி (30). இவர் மீது மதுரை மாநகரில் பல்வேறு காவல் நிலையங்களில் பல வழக்குகள் நிலுவையில் உள்ளன. இவர் சரித்திர பதிவேடு குற்றவாளி பட்டியலில் இடம் பெற்றுள்ளார். இவருடைய நண்பர் திவாகர் (30). இருவரும் நேற்று முன்தினம் இரவு அப்பகுதியில் உள்ள டாஸ்மாக் கடையில் மது அருந்தினர். மதுபோதையில் இருவரிடையே தகராறு ஏற்பட்டுள்ளது. அப்போதும் இருவரும் மாறி மாறி தாக்கிக் கொண்டனர்.

ஆத்திரமடைந்த திவாகர், அங்கு கிடந்த கல்லை எடுத்து மணியின் தலையில் போட்டு கொலை செய்துவிட்டு தப்பி சென்றார். ஜெய்ஹிந்த்புரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து திவாகரை தேடி வருகின்றனர். இந்த இரு கொலைகளுக்கும் முன்னதாக மதுரை கூடல் புதூர் செல்லையா நகரை சேர்ந்த ஷிரிப்பிக்ராஜன் (22) கிரிக்கெட் மட்டையால் அடித்துக்கொலை செய்யப்பட்டார்.